செய்தி வெளியீடு எண்: 154/2018 நாள்: 16.03.2018

**<u>வேலூர் மாவட்டம் அலமேலுமங்காபுரம் ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாணவ, மாணவிகள் தேர்வு எழுதுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.</u>**

தமிழகம் முழுவதும் 2017-18 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு இன்று (16.03.2018) துவங்கியது. வேலூர் மாவட்டம் அலமேலுமங்காபுரம் ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை மாணவ மாணவிகள் எழுதுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

வேலூர் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 621 பள்ளிகளில் பயிலும் 25938 மாணவர்களும் 26004 மாணவியர்களும் 219 மையங்களில் தேர்வு எழுத உள்ளனர். தேர்வெழுதும் மாணவர்களில் மாற்றுத் திறனாளிகளாக வேலூர் மாவட்டத்தில் 187 மாணவர்கள் தேர்வெழுதவுள்ளனர்.

தேர்வு பணிகளில் 221 முதன்மைக் கண்காணிப்பாளர்களும், 221 துறை அலுவலர்களும், 4420 அறை கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்வுகளை கண்காணிக்க 442 பறக்கும் படை உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்வு மைய வளாகத்தில் செல்போன் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். மேலும், அரசுத் தேர்வுத் துறை அறிவுறுத்தியுள்ள அனைத்து விதிமுறைகளை தேர்வர்கள் மற்றும் தேர்வு பணியில் ஈடுபடுபவர்கள் தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவர்கள் தேர்வு மையத்திற்கு உரிய நேரத்தில் செல்வதற்கு பேருந்து வசதியும், தேர்வு நாளன்று தடையில்லா மின்சாரம் வழங்கவும் மற்றும் அனைத்து தேர்வு மையங்களுக்கும் காவல் துறையின் பாதுகாப்பும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.மார்ஸ் மற்றும் தேர்வு மைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:

செய்தி மக் ுலர்,
வேலூர்.